பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

24 05 2024 **FRIDAY** **7.15 AM**

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கு நடைபெறவுள்ள ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தலுக்கான பிரச்சாரத்தில் அனைத்துக்கட்சித் தலைவர்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

2. சட்டீஸ்கர் மாநிலத்தின் பஸ்தர் பகுதியில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் மாவோயிஸ்டுகள் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

3. மகாராஷ்ட்ராவில் ரசாயன ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8–ஆக அதிகரித்துள்ளது.

4. மியான்மரிலிருந்து வரும் ரோஹிங்கியா அகதிகளுக்காக மீண்டும் எல்லையை திறக்குமாறு பங்களாதேஷ் அரசை, ஐ நா கேட்டுக்கொண்டுள்ளது.

5. **Kachreti** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - துருக்கியின் **Yanki Erel** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>**

மக்களவைக்கு நடைபெறவுள்ள ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தலுக்கான பிரச்சாரத்தில் அனைத்துக்கட்சித் தலைவர்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் ஷா, அம்பேத்கர் நகர் மற்றும் சித்தார்த் நகர் பகுதியில் நேற்று வாக்கு சேகரித்தார்.

சமாஜ்வாதி கட்சித்தலைவர் திரு அகிலேஷ் யாதவ் பிரதாப்கரிலும், பகுஜன் சமாஜ் கட்சித்தலைவர் செல்வி மாயாவதி மிர்சாபூரிலும் தங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

எட்டு மாநிலங்களில் இடம்பெற்றுள்ள 57 தொகுதிகளில் ஏழாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு அடுத்த மாதம் ஒன்றாம் தேதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், ஆறாம் கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறவுள்ள நிலையில், அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆறு மாநிலங்கள், இரண்டு யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 58 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இந்த ஆறாம் கட்டத்தேர்தலில் 889 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக கடந்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் ஒன்றாம் தேதிவரை நடைபெறுகிறது.

மொத்தம் உள்ள 543 தொகுதிகளில் 428 தொகுதிகளுக்கு இதுவரை தேர்தல் நடைபெற்றுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் நான்காம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

இதற்கிடையே, ஐந்தாம் கட்டத் தேர்தலில் 62 புள்ளி இரண்டு சதவீத வாக்குகள் பதிவானதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

கம்போடியாவில் வேலைவாய்ப்பு இருப்பதாக கூறி, தவறாக அழைத்து செல்லப்பட்ட 60 இந்தியர்களை அங்குள்ள இந்திய தூதரகம் மீட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் தாயகம் திரும்பியுள்ளதாக கம்போடியாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

கம்போடியாவில் சிக்கித்தவித்த 60 இந்தியர்களுக்காக அங்குள்ள இந்திய தூதரகம் கம்போடிய அரசுடன் பேச்சு நடத்தி, தாயகம் திரும்புவதற்கு உதவியது.

<<<<<>>>>>

சட்டீஸ்கர் மாநிலத்தின் பஸ்தர் பகுதியில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் மாவோயிஸ்டுகள் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

நாராயண்பூர் மற்றும் தண்டே வடா மாவட்ட எல்லையில் மாவோயிஸ்டுகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து, பாதுகாப்புப்படையினர் அப்பகுதியை சுற்றிவளைத்து நடவடிக்கை மேற்கொண்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

பாதுகாப்புப்படையினர் மீது மாவோயிஸ்டுகள் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும், பதில் தாக்குதலில் அவர்கள் கொல்லப்பட்டதாகவும் கூறினர்.

மேலும் பல மாவோயிஸ்டுகள் இச்சம்பவத்தில் காயமடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் நடைபெற்ற பகுதியிலிருந்து ஏராளமான ஆயுதங்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<>>>>>

தேசிய பாதுகாப்பு அகாடமியின் பட்டமளிப்பு விழா புனேயில் நேற்று நடைபெற்றது.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தை சேர்ந்த 205 வீரர்களுக்கு இவ்விழாவில் பட்டங்கள் வழங்கப்பட்டன.

இதில் நட்பு நாடுகளை சேர்ந்த 17 வீரர்களும் பட்டம் பெற்றனர்.

அத்துடன் கடற்படை, விமானப்படையின் 132 வீரர்களை கொண்ட பி-டெக் பிரிவினரும் சான்றிதழ் பெற்றனர்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட இமாச்சலப்பிரதேச மத்திய பல்கலைக்கழக துணை வேந்தர் திரு சத் பிரகாஷ் பன்சால், முப்படை பயிற்சி நிறுவனத்தில் சேருவதற்கு ஊக்குவித்த அனைத்து பெற்றோருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், ராணுவ தளபதி ஜென்ரல் மனோஜ் பாண்டே பங்கேற்று, ராணுவ வீரர்களின் செயல் விளக்க காட்சியை பார்வையிட்டார்.

<<<<<>>>>>

மேற்குவங்கத்தில் உள்ள தேசிய புலனாய்வு முகமையின் காவல்துறை கண்காணிப்பாளர் திரு தண்ராம் சிங்கை, பணியிட மாற்றம் செய்ய வேண்டும் என்ற திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் கோரிக்கையை கொல்கத்தா உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கடந்த 2022-ஆம் ஆண்டு கிழக்கு மிட்நாபூர் மாவட்டத்தில் உள்ள பூபதி நகர் என்ற இடத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு தொடர்பாக, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த இரண்டு பேரை தேசிய புலனாய்வு முகமை கைது செய்தது.

இந்நிகழ்வுக்கு ஒருநாள் முன்பாக, மேற்குவங்கத்தில் உள்ள பிஜேபி-யை சேர்ந்த திரு ஜிதேந்திரா திவாரியுடன், காவல்துறை கண்காணிப்பாளர் திரு தண்ராம் சிங் ஆலோசனை நடத்தியதாக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இதையடுத்து, அவரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையத்திடம், திரிணாமுல் காங்கிரஸ் முறையிட்ட நிலையில், அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து, கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி சார்பில், வழக்கு தொடரப்பட்டது.

ஆனால், மத்திய விசாரணை அமைப்புகளின் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்வது தொடர்பாக, நீதிமன்றம் தலையிட முடியாது என்று கொல்கத்தா உயர்நீதிமன்றம் தெரிவித்து, வழக்கை தள்ளுபடி செய்தது.

<<<<<>>>>>

மகாராஷ்ட்ராவில் ரசாயன ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8-ஆக அதிகரித்துள்ளது.

தானே மாவட்டத்தில் உள்ள டோம்பிவலி பகுதியில் நிகழ்ந்த இந்த விபத்தில் 60 பேர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் நிவாரண உதவி மாநில அரசின் சார்பில் வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே அறிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைக்கான செலவுகளை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த விபத்துக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு ஏக்நாத் ஷிண்டே உறுதியளித்துள்ளார்.

<<<<<>>>>>

நாடு முழுவதும் ஆறு லட்சத்து 80 ஆயிரம் செல்போன் இணைப்புகள் போலியானவை என்று தொலைத்தொடர்புத்துறை கண்டறிந்துள்ளது.

போலியான முகவரி சான்று, அடையாள சான்று மூலம் இவைகள் பெறப்பட்டுள்ளதாக அது தெரிவித்துள்ளது.

இதையடுத்து, தற்போதைய இணைப்புகளை அறுபது நாட்களுக்குள் மீண்டும் சரிபார்க்குமாறு தொலைத்தொடர்பு சேவை வழங்குவோரை தொலைத்தொடர்புத்துறை அறிவுறுத்தியுள்ளது.

மறுசரிபார்ப்பில் அந்த எண்கள் போலியானவை என கண்டறியப்பட்டால், உடனடியாக அவற்றுக்கான சேவை துண்டிக்கப்படும் என்று கூறியுள்ளது.

<<<<<>>>>>

சிலந்தி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் நடவடிக்கைகளை கேரள அரசு நிறுத்தி வைக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயனுக்கு எழுதியுள்ள கடிதத்தில அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த தடுப்பணை தொடர்பான திட்ட விவரங்கள் தமிழக அரசிடமோ, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திடமோ வழங்கப்படவில்லை என்பதையும் அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்திட்டம் தொடர்பான முழு விவரங்களையும் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வரை பணியை நிறுத்திவைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறும் திரு மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கோரியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் வனப்பகுதியில் கோடைகால யானைகள் கணக்கெடுக்கும் பணி நேற்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறும் இப்பணியில் 50-க்கும் மேற்பட்ட வன ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*<u>(வாய்ஸ் பைட் - ஹரிஹரன் - 48 செகண்ட்ஸ்)</u>*

<<<<<>>>>>

மியான்மரிலிருந்து வரும் ரோஹிங்கியா அகதிகளுக்காக மீண்டும் எல்லையை திறக்குமாறு பங்களாதேஷ் அரசை, ஐ நா கேட்டுக்கொண்டுள்ளது.

மியான்மரில் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான ரோஹிங்கியா அகதிகள் பங்காளதேஷ் நாடு தங்களுக்கு புகலிடமாக இருக்கும் என்று நம்புவதால் அந்நாட்டிற்கு செல்வதாக ஐ நா தெரிவித்துள்ளது.

ஏற்கனவே 13 லட்சத்திற்கும் மேற்பட்ட ரோஹிங்கியா அகதிகள் பங்களாதேஷில் தஞ்சமடைந்துள்ள நிலையில், மேலும் அகதிகளுக்கு இடம் அளிப்பதற்கு சர்வதேச நாடுகளின் ஆதரவு பங்களாதேஷுக்கு தேவை என்றும் அது கூறியுள்ளது.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**Kachreti** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - துருக்கியின் **Yanki Erel** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜார்ஜியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-7, 10-7 என்ற செட் கணக்கில் தாய்லாந்தின் **Pruchya Isaro** – கனடாவின் **Kelsey Stevenson** இணையை வென்றது.

<<<<<>>>>>

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இன்று நடைபெறவுள்ள மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டங்களில் இந்தியாவின் பி வி சிந்து – சீனாவின் **Yue Han** –யும், **Ashmita Chaliha** – சீனாவின் **Yi Man Zhang**-யும் எதிர்கொள்கின்றனர்.

<<<<<>>>>>

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் ஹைதராபாத் அணி – ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெறவுள்ள இப்போட்டி, இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<>>>>>

இந்திய வட்டு எறிதல் வீரர் **Monu Ghangas** பாரிஸில் நடைபெறவுள்ள பாராலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஜப்பானின் **Kobe** நகரில் நடைபெற்றுவரும் உலக பாரா தடகள சாம்பியன் போட்டியின் ஆடவர் பிரிவில் 34 புள்ளி 7 மீட்டர் தூரத்திற்கு வட்டு எறிந்து நான்காம் இடத்தை பெற்றதன் மூலம் அவர் இத்தகுதியை அடைந்தார்.

<<<<<>>>>>

பெல்ஜியத்தில் நடைபெற்றுவரும் புரோ ஹாக்கி லீக் போட்டியின் மகளிர் பிரிவில் பெல்ஜியம் 2-0 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

நள்ளிரவு நடைபெற்ற ஆடவர் பிரிவில் இந்தியா 1-4 என்ற கோல் கணக்கில் பெல்ஜியத்திடம் தோல்வியடைந்து.

<<<<<END>>>>>